2002 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் எவ்வளவு safety-ஆன யோசனையைச் சொல்லி இருக்கிறார் என்று பாருங்கள்.

திரு. துரைமுருகன்: இது safety-ஆன யோசனை அல்ல. இது பெரிய **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண் 58, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

58—

இரத்த வங்கி

***6516—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி ஏற்படுத்தித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி ஏற்படுத்தித் தரும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியிலுள்ள பேராவூரணி காமராஜர் அரசு மருத்துவமனை, தாலுகா தலைமை மருத்துவமனை. அங்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கானபேர் சிகிச்சைக்கு வருகின்றனர். மற்றும் பேராவூரணியைச் சுற்றி இரண்டு மாநில நெடுஞ்சாலைகள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

செல்கின்றன. அங்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்காகச் செல்கின்றபோது இரத்தம் தேவைப்படுவோருக்கு தஞ்சையிலுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து பேராவூரணியிலே இரத்த வங்கி ஏற்படுத்த ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரத்த வங்கியை அமைக்கிறபோது நம்முடைய அரசோ அல்லது எங்கள் துறையோ நினைத்தபடி நினைத்த நேரத்திலே அமைத்துவிட முடியாது. அப்படி ஒரு மருத்துவமனையிலே இரத்த வங்கி அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசும் அதேபோல, National Aids Control Organisation—NACO—அவர்களும் சில நிபந்தனைகளோடுதான் அந்த உரிமங்களை வழங்குகிறார்கள். அப்படி அந்த உரிமங்களை வழங்குகிறபோது கட்டடங்கள் இந்த அளவிலே இருக்க வேண்டும், இத்தனை அறைகள் இருக்க வேண்டும், அதேபோல இரத்தத்தைப் பாதுகாப்பதற்கு ரெமி ரெப்ரிஜிரேட்டர் போன்ற வசதிகள் இருக்க வேண்டும் என்பது போன்ற சில நிபந்தனைகளையெல்லாம் விதிக்கிறார்கள். அந்தவகையில் தஞ்சாவூரைப் பொறுத்தவரையில் தற்போது, கும்பகோணம், பட்டுக்கோட்டை, தஞ்சை மருத்துவக் கல்லூரி, ராஜா மிராசுதார் மருத்துவமனை மற்றும் 3 தனியார் இரத்த வங்கிகள் ஆகிய ஏழு இரத்த வங்கிகள் அங்கே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இரத்த வங்கிகள் ஆரம்பிப்பதற்கு புதிதாக கட்டுப்பாடுகள் இல்லை. எங்கு வேண்டுமானாலும் தேவையான இடங்களில் ஆரம்பிக்கலாம். ஆனால், இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு மைய அரசினுடைய உத்தரவைப் பெற்று, அதேபோல NACO-வினுடைய நிபந்தனைகளை நிறைவேற்றிய பிறகுதான் இரத்த வங்கிகளை அமைக்க முடியும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேராவூரணியைப் பொறுத்தவரையில் அங்கே தேவை என்று கருதுவாரேயானால் அதற்கான முன்மொழிவுகளை அனுப்பி அங்கே ஆரம்பிப்பதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 59, திரு. எஸ். தாமோதரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.